



# திருவள்ளூர் மாவட்டத்தில் விவசாயிகளுடன் கருத்து கேட்புக் கூட்டம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமை! அமைச்சர்கள் க.பொன்முடி – ஆவடி சா.மு.நாசர் – பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி பங்கேற்பு!

திருவள்ளூர் மார்ச். 1-

திருவள்ளூர் மாவட்டம், அரசு மருத்துவமனை மருத்துவ கல்லூரி கூட்டரங்கில் இன்று வேளாண்மை உழவர் நலத்துறை சார்பில் மண்டல வாரியான 2025 26 வேளாண்மை தனி நிதிநிலை அறிக்கை தொடர்பாக விவசாயிகளுடன் கருத்து கேட்புக் கூட்டம் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில் வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் க.பொன்முடி அவர்கள், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சட்டப்பேரவை துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி, வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலர் வி.தட்சிணாமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், திருவண்ணாமலை, வேலூர், திருப்பத்தூர் மற்றும் இராணிபேட்டை மாவட்டங்களைச் சார்ந்த விவசாயிகள் / விவசாய சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்று கருத்துகளை தெரிவித்தனர். 8 மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 800 க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். விவசாயிகளுக்கு தகவல் தொழில் நுட்பங்களை தெரிவிக்கும் கருத்துக்காட்சி வேளாண்மைத்துறை. தோட்டக்கலைத்துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறை, வேளாண் பொறியியல் துறை, விதைசான்றளிப்புத் துறை, சர்க்கரைத்துறை திரூர் நெல் ஆராய்ச்சி நிலையம் ஆகியவைகள் அமைக்கப்பட்டிருந்ததை அமைச்சர் பெருமக்கள் பார்வையிட்டார்கள்.

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் செய்தியாளர்களுக்கு தெரிவிக்கையில்,

திருவள்ளூர் மாவட்டத்தில், இன்று 8 மாவட்டங்களைச் சார்ந்த விவசாயிகள் உடன் கருத்து கேட்பு கூட்டம் நடைபெற்றது இந்த விவசாய கருத்து கேட்பு கூட்டத்தில் 27 விவசாயிகள் தங்களுடைய கருத்துக்களை தெரிவித்தனர். இதில் 10 சட்டமன்ற உறுப்பினர்கள் கடந்த நான்கு நிதிநிலை அறிக்கையில் 24 கூட்டங்கள் நடத்தி இருக்கின்றோம் இதில் திரளான விவசாயிகள் கலந்து கொண்டிருக்கிறார்கள் இந்தக் கருத்துக்கள் அடிப்படையில் சில விவசாயிகளுக்கு தேவையான வசதிகள் விவசாயிகளுக்கு செய்யவில்லை என்று கருத்துக்கள் தெரிவித்துள்ளார்கள் நாங்கள் தமிழநாடு முதல்வர் அவர்களின் கவனத்திற்க்கு கொண்டு சென்று அதற்கான அனுமதி பெற்று விவசாயிகளிடம் இடம் தெரிவிப்போம் இன்றைய தினம் திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் கடந்த ஆட்சியில் நிதி அறிக்கையில் நிறைவேற்றப்படாத திட்டங்கள் அனைத்தும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நிறைவேற்றப்பட்டுள்ளது விவசாயிகள் சார்பாகவும் என் சார்பாகவும் அதற்காக முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்து கொள்கிறோம். கடந்த ஆட்சியில் விவசாயிகள் வறட்சி மழை பாதிப்பு என்று போராட்டம் போராட்டம் என்று நடத்திருந்தனர் அதற்போது இந்த ஆட்சியில் விவசாயிகளின் தேவைகளை அறிந்து உடனடியாக விவசாயிகளின் கோரிக்கையினை பூர்த்தி செய்யும் முதலமைச்சராக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எல்லா திட்டங்கள் பூர்த்தி செய்து கொண்டு வருகிறார்கள். அந்த அடிப்படையில் கிட்டதட்ட 31 இலட்சம் ஏக்கர் நிலம் நான்கு ஆண்டுகளில் பாதிப்பு அடைந்திருந்தது. அதனை நிவர்த்தி செய்யும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 1545 கோடி நிவர்ணம் வழங்கியுள்ளார்கள். அதே போல விவசாயிகளை அடுத்த கட்டத்திற்கு செல்வதற்கு அதாவது அவர்களுக்கு இலாபம் கிடைக்கும் வகையில் இயந்திரமயமாக்கும் திட்டமாக மாற்ற வேண்டும் என்றும் என்னென்றால் ஆட்கள் பற்றாக்குறை நிறைய உள்ளதால் விவசாயிகளுக்கு தேவையான நடவு இயந்திரம், அறுவடை இயந்திரம், கரும்பு அறுவடை இயந்திரம், போன்ற வைகளை மானிய விலையில் வழங்கி அவர்களின் வாழ்வாதரத்தை உயர்த்தவும், மேலும் மண்வளத்தை காக்கும் வகையில் இயற்கை விவசாயத்தை ஆதாரிப்பது குறித்தும், மாவட்டம் தோறும் வேளாண்மை கல்லூரிகள் துவங்குவது குறித்தும் இதுபோன்ற பல்வேறு கோரிக்கைளை முன் வைத்திருந்தார்கள்.இந்த கருத்து கேட்பில் விவசாயிகள் வைத்த கோரிக்கைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்க்கு கொண்டு சென்று விவசாயிகளுக்கு பயன்பெறும் வகையில் நல்ல திட்டங்களை நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்டும் என வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை ஆணையர் டி.ஆபிரகாம், வேளாண்மை துறை இயக்குநர் பி.முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மழை பயிர்கள் துறை இயக்குநர் பெ.குமரவேல்பாண்டியன், சர்க்கரைத்துறை இயக்குநர், த.அன்பழகன் திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர், பிரதாப் திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர், எஸ்.சசிகாந்த் செந்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் திருத்தணி எஸ்.சந்திரன் வி.ஜி.இராஜேந்திரன், ஆ.கிருஷ்ணசாமி, எஸ்.சுதர்சனம், டி.ஜெ.கோவிந்தராஜன் , மு.பெ. கிரி பெ.சு.தி.சரவணன், எஸ்.எஸ். பாலாஜி திருப்போரூர், சி.சிவக்குமார் மயிலம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் துணைவேந்தர், வெ.கீதாலட்சுமி, வேளாண்மை பொறியியல் துறை தலைமை பொறியாளர் ஆர்.முருகேசன், மாவட்ட வருவாய் அலுவலர், ஆ.இராஜ்குமார், திருவள்ளூர் வேளாண்மை இணை இயக்குநர் கலாதேவி மற்றும் அரசு அலுவலர்கள் விவசாயிகள் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய ஊழியர்கள் முன்னேற்ற சங்கம் சார்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

## ந.சண்முகசுந்தரம் ஏற்பாட்டில் கழகத்தினர் பங்கேற்பு!

சென்னை, மார்ச். 1-

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய ஊழியர்கள் முன்னேற்ற சங்கம் சார்பில் தமிழ்நாடு முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு இன்று 1.3.2025 சனிக்கிழமை காலை 07.30 மணி முதல் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய நுழைவு வாயிலில் தமிழ்நாட்டின் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு மேளதாளங்கள் முழங்க சிறப்பான முறை யில் வரவேற்பு வழங்கப்படுகிறது.

மேலும் 03.03.2025 அன்று, தலைமை அலுவலகம், கோட்ட அலுவலகம் மற்றும் எஸ்டேட் அலுவலகம் ஆகிய இடங்களில் இனிப்பு வழங்கப்படுகிறது.

தாம்பரம் அருகே உள்ள பெரும்பாக்கத்தில் டிரீம் கிட்ஸ் அறக்கட்டளையில் மதிய உணவு வழங்கப்படுகிறது.

காக்கும் கரங்கள் முதியோர் இல்லத்தில் மார்ச் 31 அன்று முழுவதும் உணவு வழங்கப்படுகிறது.

ஆந்திர மகிளா சபாவில் உள்ள மாற்றுத் திறனாளி களக்கு மனநலம் குன்றியவர் களுக்கும் காலை சிற்றுண்டி வழங்கப்படுகிறது.

மதுரை மாநகராட்சி மற்றும் தானும் மலையான் நினைவு அறக்கட்டளை இணைந்து நடத்தும் நகர்புற விடாற்றோருக்கான தங்கும் இல்லத்தில் மதிய உணவு வழங்கப்படுகிறது.

திருச்சி கங்காரு மனநலம் காப்பகத்தில் மதிய உணவு வழங்கப்படுகிறது.

சேலம் தாமரை உண்மை, ஒற்றுமை மற்றும் சேவை முதியோர் இல்லத்தில் மதிய உணவு வழங்கப்படுகிறது.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை சங்க மாநில பொதுச் செயலாளர் தலைமை செயற்குழு உறுப்பினர் ந.சண்முகசுந்தரம் செய்துள்ளார்.